**ஆசிரியர் தேர்வு வாரியம்**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

2024-ஆம் ஆண்டிற்கான இடைநிலை ஆசிரியர் தெரிவுப் பணிகள் சார்ந்து இவ்வாரியத்தால் 05.05.2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி **08.05.2025** மாலை **5.00** மணிவரை மின்னஞ்சல் மூலமும் நேரடியாகவும் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் இவ்வாரியத்தால் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுக்களில் மனுதாரர்கள் அளித்த விவரங்கள் மற்றும் இணைப்பாக பெறப்பட்ட சான்றிதழ்களின் அடிப்படையில் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டது. இதன்படி, சான்றிதழ் சரிபார்ப்பிற்கான வளையத்திற்குள் இடம் பெற்ற பணிநாடுநர்கள் கூடுதல் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இப்பணிநாடுநர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு 16-05-2025 அன்று காலை முதல் பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டத்தின் முதலாம் தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் நடத்தப்படவுள்ளது எனவும் பணிநாடுநர்கள் சான்றிதழ் சரிபார்ப்பில் தவறாமல் கலந்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

**தலைவர்**

இடம்: சென்னை-6
நாள்: 13.05.2025.